මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PFD/RED/REG/Cir01/01/2020 (i)/2022
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2022.01.12

அரச நிதிச் சுற்றுநிருப இல: 01/2020 (i)

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரச வங்கிகள், பல்கலைகழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரசுடைமை நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்

**1992 நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கான திருத்தங்களை மேற்கொள்ளல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரச நிதி மற்றும் திறைசேரி செயற்பாடுகள் சுற்றுநிருபங்களை ஒன்றுசேர்த்து பயன்பாட்டிற்கு இலகுவான வகையில் தனியொரு சுற்றுநிருபமாக வெளியிடுதல்**

2022 ஆம் ஆண்டின் செலவின முகாமைத்துவம் தொடர்பிலான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு இல. 5.4 இன் கீழ் அரச நிறுவனங்களின் தொலைபேசி சார் செலவினக்களை 25 வீதத்தினால் குறைப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02. இதன் பிரகாரம், 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்கத்தையுடைய அரச நிதி சுற்றுநிருபத்தின் II ஆம் பகுதியின் 4 ஆம் பந்தி **"அரசு அலுவலர்களுக்கு தகவல் தொடர்பு வசதிகளை வழங்குதல் மற்றும் சிட்டைகளைத் தீர்த்தல்"** இன் கீழ் வரும் 4.1. ஆம் அட்டவணை கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.

"4.1 பின்வரும் அட்டவணையின் (III) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைக்குள் அரசாங்க அலுவலர்களின் உத்தியோகபூர்வ தொலைபேசி சிட்டைகளை அரசாங்கம் செலுத்தும் அதேவேளை உத்தியோகபூர்வ வதிவிட தொலைபேசி, கையடக்க தொலைபேசி மற்றும் இணைய இணைப்பு பயன்பாட்டிற்கான கட்டணங்களை தீர்ப்பதற்கு, கீழே (III) (ஆ) குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு சம்பளத்துடன் மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்."

| I<br>தொகுதி<br>எண் | II<br>அலுவலர் வகை | III<br>அதிகபட்ச செலவின வரையறை<br>(அனைத்து வரி மற்றும் மாதாந்த கட்டணங்கள் உட்பட) ரூபா | |
|---|---|---|---|
| | | (அ)<br>அலுவலக<br>தொலைபேசி | (ஆ)<br>உத்தியோகபூர்வ வதிவிட தொலைபேசி/ கையடக்க தொலைபேசி / இணையதள இணைப்பு |
| I | அமைச்சின் செயலாளர், மாகாண சபை பிரதம செயலாளர்கள் மற்றும் சமமான மற்றும் உயர் நிலை அலுவலர்கள் | 7,500.00 | 7,500.00 |
| II | அமைச்சின் மேலதிகச் செயலாளர், திணைக்களத் தலைவர்கள் மற்றும் சமமான மற்றும் உயர் நிலை அலுவலர்கள் | 4,500.00 | 6,000.00 |
| III | சிரேட்ட உதவிச் செயலாளர், திணைக்களத் தலைவரல்லாத பணிப்பாளர் மற்றும் ஆணையாளர், மாகாண திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர் மற்றும் சமமான அலுவலர்கள் | 3,000.00 | 3,750.00 |
| IV | பிரதிப் பணிப்பாளர், பிரதி ஆணையாளர் மற்றும் சமமான அலுவலர்கள் | 2,250.00 | 3,000.00 |
| V | உதவிப் பணிப்பாளர், உதவிச் செயலாளர், உதவி ஆணையாளர் மற்றும் சமமான அலுவலர்கள் | 1,875.00 | 1,875.00 |
| VI | நிர்வாக உத்தியோகத்தர் | 1,500.00 | 1,500.00 |
| VII | மேலே I-VI வரையான அலுவலர் வகைகளைத் தவிர சேவை அவசிய நிலைமையைப் பொறுத்து, அலுவலர் ஒருவருக்கு தொலைபேசி தேவைப்படலாமென திணைக்களத் தலைவர் முடிவு செய்தால், சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் தொலைபேசி சிட்டைகளைத் தீர்ப்பதற்கான வரையறை | 1,875.00 | |

03. இத் திருத்தம் 01.01.2022 முதல் நடைமுறைக்கு வரும் அதேவேளை, 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அதில் உள்ளவாறு நடைமுறைப்படுத்தப்படும்.

**ஒப்பம்/ எஸ். ஆர். ஆட்டிகல**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:
1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்